In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 163/2023 | Prosecution witness P.W.15 |
| Name: Alagesan | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 10-06-2025.

**(Accused 1 produced through V.C. A2 died. A3 to A8 are present. A9 absent, petition u/s 355 BNSS. filed and allowed,)**

முதல் விசாரணை :-

நான் தற்சமயம் ஆத்தூர் வட்டம், பித்ததளைப்பட்டி, வக்கம்பட்டி தொகுப்பு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு நான் செட்டிநாயக்கன்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன். கடந்த 27.07.2023 ம் தேதி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்திலிருந்து எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறவேண்டும் என்று சொல்லி அழைத்தார்கள். நானும் எனது கிராம உதவியாளர் விஜயன் என்பவரும் 28.07.2023 ம் தேதி காலை 7.30 மணிக்கு திண்டுக்கல் வடக்கு காவல் நிலையம் சென்றோம். அங்கு ஆய்வாளர் இருந்தார். காவல்நிலையத்தில் இருந்த ஒரு நபரை எங்களிடம் காட்டி அந்நபரை விசாரிக்கப்போவதாகச்சொன்னார். அவர் நீதிமன்றத்தில் இன்று ஆஜரில்லை. அந்நபரை ஆய்வாளர் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார். அதில் நானும் கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்நபர் கொலை செய்யப்பயன்படுத்திய கொலைக்கருவிகளையும், காரையும் காட்டுவதாகக் கூறினார். அதன் அடிப்படையில் நானும், கிராம உதவியாளரும், காவலர்களும், தடயவியல் நிபுணரும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த நபரும் அவருடன் இன்னும் 6 நபர்களும் திண்டுக்கல் சிட்டி மருத்துவமனையின் பின்புறம் உள்ள

காலியிடத்திற்கு சென்றோம். ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த நபர் அங்கிருந்த சிவப்பு கலர் மாருதி ஷிப்ட் காரை அடையாளம் காட்டினார். அந்த காரின் எண் TN−57−AB−4655 ஆகும். அந்த காரின் டிக்கியை திறந்து டிக்கியில் இருந்த 5 பட்டாக்கத்திகள், இரத்தக்கறைபடிந்த ப்ளு கலர் ஜீன்ஸ் பேண்ட் 1, லைட்புளுவில் வெள்ளைக்கலர் கோடுபோடட சட்டை ஒன்று, சிமிண்ட் வெள்ளைக்கலர் கட்டம்போட்ட சட்டை ஒன்று, வெள்ளை சட்டையில் ப்ரவுன் கலர் பூ போட்டது ஒன்று, வயலட் கலரில் கருப்பு கலர் பூ போட்ட கைலி ஒன்று, வெள்ளை கலர், சிமிண்ட் கலர் கோடுபோட்ட சட்டை ஒன்று, பச்சை, வெள்ளை, கருப்பு, ப்ளு கட்டம்போட்ட கைலி ஒன்று, பச்சை கலர் சட்டை ஒன்று, கருப்பு, வெள்ளை ப்ளு கலர் கட்டம்போட்ட கைலி ஒன்று (அனைத்திலும் இரத்தக்கறை பட்டிருந்தது) ஆகியவற்றை எங்கள் முன்னிலையில கைப்பற்றினார்கள். அன்றைய தினம் காவல் நிலையத்தில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த நபர் காணொளி காட்சியில் தெரியும் 1வது எதிரியை காண்பித்து கேட்டபோது அந்நபர்தான் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த நபர் என கூறுகிறார். என்னிடம் காண்பிக்கப்படும் 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.6. 1வது எதிரி எடுத்து ஆஜர் செய்த ஷிப்ட் கார் மற்றும் பட்டா கத்தி ஒன்று, 2 ஜீன்ஸ் பேண்ட், ஒரு சட்டை கைப்பற்றியதற்கான அத்தாட்சி அதசாஆ.7. எங்களுடன் வந்த தடயவியல் நிபுணர் காரிலும், கார் சீட்டிலும் படிந்திருந்த இரத்தக்கறையை மாதிரிக்காக எடுத்தார். அதற்கான அத்தாட்சியில் நாங்கள் கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சி அதசாஆ.8. 2வது எதிரி முகமது இர்பான் இரத்தககறைபடிந்த ஒரு கருப்பு கலர் டிராக் பேண்ட், சிமிண்ட் வெள்ளைக்கலர் சட்டை, ஒரு பட்டாக்கத்தி எடுத்து ஆஜர் செய்ததற்கான அத்தாட்சியில் நாங்கள் கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சி அதசாஆ.9. எதிரி ஷேக் அப்துல்ல (3வது எதிரி) இரத்தக்கறைபடிந்த பட்டாக்கத்தி, வெள்ளைக்கலரில் பிரவுன் கலர் பூ போட்ட

சட்டை ஒன்று, வயலட் கலர் கருப்பு கட்டம்போட்ட கைலி ஒன்று எடுத்து ஆஜர் செய்ததற்கான அத்தாட்சியில் நாங்கள் கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சி அதசாஆ.10. எதிரி சதாம் உசேன் (4 வது எதிரி) சிமிண்ட் கலர் வெள்ளைக்கலர் கோடுபோட்ட சட்டை, பச்சை வெள்ளை கருப்பு கலர் கட்டம்போட்ட கைலி, ஒரு பட்டாக்கத்தி எடுத்து ஆஜர் செய்ததற்கான அத்தாட்சியில் நாங்கள் கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சி அதசாஆ.11. எதிரி முகமது மீரான் (5 வது எதிரி) ஒரு பட்டாக்கத்தி, ஒரு பச்சை கலர் சட்டை, லுங்கி ஒன்று எடுத்து ஆஜர் செய்ததற்கான அத்தாட்சியில் நாங்கள் கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சி அதசாஆ.12. எதிரி சக்தி மகேஷ்வரன் (6 வது எதிரி) கருப்பு கலர் யமகா பைக் TN–57–BQ–6372 ஆஜர் செய்ததற்கான அத்தாட்சி அதசாஆ.13. கலீல் அகமது (7 வது எதிரி) TN–57–BQ–5801 பல்ஸ் இருசக்கர வாகனத்தை எடுத்து ஆஜர் செய்ததற்கான அத்தாட்சி அதசாஆ.14. சிவப்பு கலர் ஷிப்ட் காரின் டிக்கியின் இருந்த பொருட்களை அன்றைய தினம் எங்கள் முன்னிலையில் காவல்நிலையம் கொண்டுவந்தார்கள். அதன் பிறகு காரை எப்போது கொண்டுவந்தார்கள் என்பது எனக்கு தெரியாது. 5 பட்டாக்கத்திகள் சாபொ.2 வரிசை, இரத்தக்கறைபடிந்த ப்ளூ கலர் ஜீன்ஸ் பேண்ட் 1 சாபொ.3, லைட்புளூவில் வெள்ளைக்கலர் கோடுபோட்ட சட்டை ஒன்று சாபொ.4, சிமிண்ட் வெள்ளைக்கலர் கட்டம்போட்ட சட்டை ஒன்று சாபொ.5, வெள்ளை சட்டையில் ப்ரவுன் கலர் பூ போட்டது ஒன்று சாபொ.6, வயலட் கலரில் கருப்பு கலர் பூ போட்ட கைலி ஒன்று சாபொ.7, வெள்ளை கலர் சிமிண்ட் கலர் கோடுபோட்ட சட்டை ஒன்று சாபொ.8, பச்சை, வெள்ளை, கருப்பு, ப்ளூ கட்டம்போட்ட கைலி ஒன்று சாபொ.9, பச்சை கலர் சட்டை ஒன்று சாபொ.10 கருப்பு, வெள்ளை ப்ளூ கலர் கட்டம்போட்ட கைலி ஒன்று சாபொ.11. கருப்பு கலர் யமகா பைக் TN–57–BQ–6372 மற்றும் TN–57–BQ–5801 பல்ஸ் இருசக்கர வாகனம் சாபொ.12 மற்றும் 13. மறுநாள் டிஎஸ்பி

அவர்கள் என்னையும் என் உதவியாளரையும் விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தார்.

**1, 3, 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை—**

காரின் டிக்கியின் உள்ள சொத்துக்களை யார் எடுத்துக்கொடுத்தது என்றால் காவல் நிலையத்தில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த நபர் எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி நபர் அனைத்து வழக்குச்சொத்துக்களையும் எடுத்து ஆஜர் செய்தாரா என்றால் அவருடன் வந்திருந்த 6 நபர்களும் அவரவர்கள் உடுத்தியிருந்த ஆடைகளையும் பயன்படுத்திய பட்டாக்கத்தியையும் எடுத்து ஆஜர் செய்தார்கள். அந்த 7 நபர்களில் நான் இவ்வழக்கிற்கு முன்னதாக சந்தித்தது கிடையாது பழக்கம் கிடையாது என்றால் சரிதான். அவர்களது பெயரையும் அடையாளத்தையும் நான் நினைவு வைத்துக்கொள்ளும் அளவிற்கு எனக்கு ஞாபகம் இருப்பதற்கு ஏதாவது காரணம் உள்ளதா என்றால் இவ்வழக்கில் சாட்சி சொல்லவேண்டியிருப்பதால் ஞாபகம் உள்ளது. மேற்படி 7 நபர்களின் பெயர்கள் எனக்கு எப்படி தெரியும் என்றால் அத்தாட்சிகளில் கையெழுத்துபோடும்போது பார்த்து தெரிந்துகொண்டேன். கைப்பற்றப்பட்ட 5 பட்டாக்கத்திகளின் முழு அடையாளமாகிய அளவுகளுடன் என்னால் சொல்ல இயலாது என்றால் சரிதான். அந்த 5 பட்டாக்கத்திகளில் எந்த எந்த எதிரிகள் எந்தெந்த பட்டாக்கத்திகளை எடுத்து ஆஜர் செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது ஆசிக் என்பவர் பெயரை தவிர்த்து வேறு யார் பெயரையும் குறிப்பிட்டுக்கூறவில்லை என்றால் சரிதான். பொருட்களை கைப்பற்றிய பிறகு எங்களை போலீசார் விசாரித்தார்கள். பொருட்களை கைப்பற்றிய பின்னர் போலீசார் என்னை விசாரித்திருந்தால் அந்த விசாரணையில் மற்ற எதிரிகளின் பெயர்களையும் குறிப்பிட்டுச்சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. ஆசிக் கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை சொல்லச்சொல்ல காவல் நிலையத்திலிருந்த

போலீசார் எழுதினார். அவ்வாறு காவலர் எழுதிய பேப்பரில் நாங்கள் கையெழுத்து போட்டோம் என்றால் டைப் செய்து கொண்டுவந்த பேப்பரில் கையெழுத்து போட்டோம். போலீசார் எழுதிய பேப்பரில் என்ன எழுதப்பட்டது என்பதுவும் டைப் செய்த பேப்பரில் என்ன டைப் செய்யப்பட்டதும் என்பதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. டைப் செய்த பேப்பரில் என்ன உள்ளது என படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். காவலர் எழுதிய பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. 8 அத்தாட்சிகளில் எந்த எந்த அத்தாட்சியில் கண்ட வழக்குச்சொத்துக்கள் எந்த நேரத்தில் கைப்பற்றப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 11 மணியிலிருந்து 2.30 மணி வரை கைப்பற்றப்பட்டது. போலீசார் விசாரணையில் உடன்வந்த 6 நபர்கள் பொருட்களை எடுத்துக்கொடுத்ததாக மட்டுமே சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் எதிரிகள் பெயர்களை குறிப்பிட்டு பொருட்களை எடுத்துக்கொடுத்ததாக போலீசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் மனப்பாடம் செய்து சாட்சியம் அளித்துள்ளேன் என்றும் போலீசார் விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் முன்னிலையில் பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும் வழக்கிடைச்சொத்துக்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றும் அதற்கான போலீசாரால் எழுதிவைக்கப்பட்ட அத்தாட்சியில் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க கையெழுத்திட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்களை ஆய்வாளர் சாட்சியாக இருக்க கூப்பிட்டபோது என்ன வழக்கு, எதற்காக என்பது பற்றி நான் கேட்டேன். நான் கிராம நிர்வாக அலுவலர் என்பதால் வருவாய்த்துறை வேலையைத்தான் பார்க்கவேண்டும் என்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சனையில் சாட்சியாக நான் இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**7 முதல் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

என்னுடைய அலுவலகம் திண்டுக்கல் பைபாஸ் ரோட்டில் செட்டிநாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ளது. பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இடம் சீலப்பாடி கிராம நிர்வாக எல்லைக்குட்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் எனக்கு தெரியாது. எதிரிகளின் பெயர் அவர்கள் எடுத்துக்கொடுத்த ஆடைகள் கலர் உட்பட ஆகியவற்றைக் குறிப்பிட்டு ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆயுதங்களின் அளவை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வருவாய்த்துறை அலுவலை தவிர வேறு அலுவலுக்கு செல்லும் மேலதிகாரியின் அனுமதி பெற்றும் அவ்வாறு செல்வதை அலுவலக கோப்பில் குறிப்பு செய்யவேண்டும் என்றும் சொன்னால் சரிதான். தாசில்தாரிடம் அனுமதி பெற்றுத்தான் சென்றோம். வாய்மொழியாக தெரிவித்தோம். அவ்வாறு அனுமதி பெற்றதாக நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பொருட்கள் கைப்பற்றியதற்கான இடம் சீலப்பாடி கிராம நிர்வாக அலுவலகத்துக்குட்பட்ட எல்கையாக உள்ள நிலையில் நான் மறுப்பு தெரிவித்தேனா என்றால் முதலில் அழைத்தபோது அந்த இடம் தெரியாது. ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற பிறகுதான் மேற்படி இடம் தெரியவந்தது. அதனால் நான் மறுப்பு தெரிவிக்கவில்லை. கார் நின்ற காலியிடம் யாருக்குச்சொந்தமான இடம் என்பது எனக்குத் தெரியாது. சிட்டி மருத்துவமனைக்கு மேற்கு பக்கம் ராஜாங்கம் டிரான்ஸ்போர்ட் லாரி ஆபீஸ் இருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. அதனை ஒட்டி தெற்கு புறம் ராஜாங்கம் பஸ் சர்வீஸ் இருக்கிறது என்றால் தெரியாது. சிட்டி மருத்துவமனையை ஒட்டி கிழக்கு பக்கம் வரிசையாக கடைகள் இருக்கிறது என்றால் சரிதான். அந்த ஏரியா பெயர் காந்திஜி நகர் என்றால் சரிதான். அந்த நகரில் வரிசையாக வீடுகள் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எதிரிகளை எதில் அழைத்துச்சென்றார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால்

போலீஸ் ஜீப்பில் அழைத்துச்சென்றார்கள். அதுபற்றி போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் எனக்கும் என் உதவியாளருக்கும் அனுப்பிய அழைப்பாணையை காவல்நிலையத்தில் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். வழக்கிடைச்சொத்துக்களை கைப்பற்றும்போது போட்டோக்கள் எடுத்தார்கள் என்றால் சரிதான். அதன் பின்பு பொருட்கள் கைப்பற்றிய இடத்திலிருந்து எங்களை காவல்நிலையத்திற்கு எதில் அழைத்துச்சென்றார்கள் என்பது பற்றி போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 28.07.2023 ம் 1வது எதிரியிடம் வாக்குமூலம் பெற்றது வழக்குச்சொத்து கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். அதற்கு 6 நாட்களுக்கு முன்னதாக 22.7.2023ம் தேதி எதிரிகளின் புகைப்படங்களுடன் செய்தி தினமலர் நாளிதழிலில் வெளிவந்தது என்றால் எனக்கு தெரியாது. போலீசார் சொல்லிக்கொடுத்து போலீசார் விசாரணையில் சொல்லாத விவரங்களை தற்போது நீதிமன்றத்தில் சாட்சியமாக சொல்லி வருகிறேன் என்றால் சரியல்ல. சிட்டி மருத்துவமனைக்கு பின்புறம் காலியிடமே இல்லை என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் காவல்துறையினர் கேட்டுக்கொண்டதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இதற்கு முன்னர் இதுபோன்ற வழக்கில் இரண்டுமுறை சாட்சியாக இருந்துள்ளேன்.

4 மற்றும் 6ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–

1 முதல் 3, 5, 7 முதல் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.06.10 16:45:44 +0530

Principal District Judge,
Dindigul.